ISSN:2582-9599
பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# தமிழ் இலக்கிய நாடக மரபு – பாரதிதாசன்

31

**முனைவர் அ.குருமூர்த்தி**
**உதவிப்பேராசிரியர் மற்றும் தலைவர்**
**தமிழ்த்துறை ஸ்ரீ வாசவி கல்லூரி (சுயநிதிப்பிரிவு)**
**ஈரோடு – 638 316**

**ஆய்வு சுருக்கம்**

பாரதிதாசன், தமிழ் இலக்கியத்துறையில் ஆற்றியுள்ள பணிகள், அளப்பரியனவாகும். அவர் இயற்றியுள்ள இலக்கிய வகைகளில், தனிப்பாடல்கள், தனிப்பெருஞ்சிறப்பைப் பெற்றனவாகும். கதைப்பாடல்கள், கருத்தைப் பெரிதும கவருவனவாகும். சிறுகதைகள் குறிக்கோள்களைச் சிந்தனையில் புகுத்துவனாக உள்ளன. பெருங்கதைகள் நெஞ்சைத் தொடக்கூடிய நயப்பாடு மிகுந்துள்ளது. இலக்கியப் படைப்புக்கள் சிந்தைக்குத் தெவிட்டாத இன்பத்தைத் தருவனவாக இருக்கின்றன. ஆராய்ச்சிக் கட்டுரைகள் வியப்புணரவை ஊட்டும் வல்லமை வாய்ந்தனவாகும், நாடகங்கள் கண்ணுக்கும் காதுக்கும் கருத்துக்கும விருந்தளிக்கும் பெற்றியனவாகும், திரைக்கதைப் படைப்புகள் போற்றிப் புகழ்த்தக்கனவாகும், நகைச்சுவைத் துணுக்குகள் சுவைத்து மகிழ்வதற்குரியனவாகும்.

கலைகளிலெல்லாம் மிகச் சிறந்த கலை, நாடகக்கலை என்பார்கள் அறிஞரகள் நாடக்க் கலையில் தான் இயற்கலை, இசைக்கலை, நாடக்கலை மூன்றும் பொருந்தி நின்று பொலிவு பயக்கும். நாடகத்தில் பொதிந்து கிடக்கும் இலக்கியச் சிந்தனை அழகைப் புலப்படுத்திக் கருத்துக்கு இன்பம் தருவதாகும். அதில் மிளிரும் இசைப்பாடல்கள், சொல்லழகைப் புலப்படுத்திக் காதுக்கு இன்பந்தருவனவாகும். அதில் காணப்படும் அசைவுகள் உடலழகைப் புலப்படுத்திக் கண்ணுக்கு இன்பந் தருவனவாகும். இந்தக் காரணங்கள் பற்றித்தான், கலைகள் யாவற்றிலும் நாடக்க் கலைத்தான் உலகெங்கணும் பெருந்திரளான மக்களை ஈர்த்து நிறுத்தும் வல்லமையைப் பெற்றிருக்கிறது.

மனிதனின் உள்ளத்திற்கு மகிழ்ச்சி தருவது எதுவோ, அத அழகு எனப்படுகிறது. அழகை வெளிப்படுத்துவது எதுவோ, அது கலை எனப்படுகிறது. அந்த வகையில் நாடக்கலை பெருமகிழ்ச்சியையும் பேரின்பத்தையும் பயப்பதாக அமைகிறது படித்துப் பார்க்கும் நாடகம் உள்ளத்திற்கு மகிழ்ச்சியை ஊட்டும் நடித்துக் காட்டப்படும் நாடகம் கண் – காது – கருத்து ஆகிய மூன்றிற்கும் மகிழ்ச்சியைத் தரும்.

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் இயல்-இயல்-நாடகம் ஆகிய மூன்று துறைகளிலும் ஈடுபாடு கொண்டு, அவற்றில் தோய்ந்து நின்று, ஓங்கு புகழ் எய்தித் திகழ்ந்தார். புரட்சிக்கவிஞர் போற்றுதலுக்குரிய கவிஞராய், புகழ்வதற்குரிய இசைக்கலைஞராயப் பாராட்டுவதற்குரிய நாடக கலைஞராய் விளங்கினார்.

**முன்னுரை**

புரட்சிக்கவிஞருக்கு இளமைப் பருவத்திலிருந்தே முத்தமிழ்த் துறைகளில் விருப்பம் அதிகம், ஈடுபாடும் மிகச் சிறப்பாக இருந்து வந்துள்ளன. அவர், புதுவையில் திருப்புளிச்சாமி நடத்தி வந்த திண்ணைப் பள்ளிக் கூடத்தில் படிக்கும்போதே, பள்ளியின் ஆண்டு விழாவில் நடைபெற்ற நாடக் கலை நிகழ்ச்சிகளில், இராமர் – சீதை – குலேசர் போன்ற வேடங்களில் நடித்துள்ளார். நடிப்புத் திறனையும், பாட்டுப்பாடும் திறனையும் அவர் சிறப்பாகப் பெற்றிருந்ததால், நாடக மேடைகளில் நடைபெற்ற நாடகங்களில் நடிக்குமாறு, நாடக அமைப்பினரால் அவர் அடிக்கடி அழைக்கப் பெற்றதுண்டு.

புரட்சிக்கவிஞர், பள்ளியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்த போது, சிந்தாமணி, வீரத்தாய் போன்ற நாடகங்களை எழுதிப் பள்ளியில் நடைபெற்ற விழா நிகழ்ச்சிகளின் போது, அவற்றை நடித்துக் காட்டவும் செய்தார். கதைப்போக்கு – நாடக அமைப்பு – இயக்குவிக்கும் பணி ஆகியவற்றிற்றிக்கான பொறுப்புக்களைப் புரட்சிக்கவிஞரே ஏற்றிருந்தார். பல நேரங்களில் நடிகர்கள் எப்படி நடிக்க வேண்டும் என்பதை அவரே நடித்துக் காட்டுவார்.

புரட்சிக்கவிஞர், எதிர்பாராத முத்தம் என்னும் கதைப் பாடலை, கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் அவர்களின் வேண்டுகோளுங்கிணங்க, அரங்கில் நடித்துக் காட்டுவதற்கு ஏற்றபடி, நாடகமாக ஆக்கித் தந்தார். அது போன்றே முத்தமிழ் நிலையத்தார் விருப்பத்திணங்க, புரட்சிக்கவி, இசையமுது ஆகியவற்றை நடிப்பதற்கேற்ற நாடகங்களாக உருவாக்கித் தந்தார்.

**நாடகம்**

இயல், இசை, ஆடல், பாடல், கூத்து, நாட்டியம், நடம், நடனம் போன்ற சொற்கள் எப்படித் தூய தனித்தமிழ்ச் சொற்களோ, நாடகம் என்ற சொல்லும் தனித்தமிழ்ச் சொல்லே ஆகும்.

நாடகம் என்பது நாட்டின் இயல்புகளைத் தன்னகத்தே கொண்டு, அவற்றை அழகுற, சிறப்புற வெளிப்படுத்துவது என்று பொருள்படும். நாட்டில் வாழும் மக்களின் எண்ணங்கள், உணர்ச்சிகள், எழுச்சிகள், நடவடிக்கைகள், நாட்டின் நடப்புகள், நிகழ்ச்சிகள் போன்றவற்றைக் கதைவடிவில் கற்பனை தழுவிய முறையில் வெளியிடுகின்ற காரணத்தால் தான், நாடு அகம் என்பது நாடகம் என்றாயிற்று என்பர். அறிஞர்கள்.

நாடகம் என்ற சொல், தொல்காப்பியர் காலத்திற்கு முன்பு இருந்தே, பல காலந்தொட்டு வழக்காற்றில் இருந்து வந்திருக்கிறது என்பது, **”நாடக வழக்கினும், உலகியல் வழக்கினும்”1** என்ற தொல்காப்பிய நூற்பாவின் மூலம் அறியமுடிகிறது.

**கூத்து**

ஆடல், கூத்து, அபிநயம், நாடகம் பற்றிய நூல்கள் பண்டைத் தமிழகத்தில் சிறந்து விளங்கியதை மணிமேகலைக் காப்பியம் சுட்டிக் காட்டுகிறது.

**”ஆடல், கூத்தினொடு, அபிநயம் தெரிய ஓர்**
**நாடகக் காப்பிய நன்னூல் நுனிப்போர்”2**

என்று மணிமேகலையின் அடிகள் குறிப்பிடுகின்றன.

தொல்காப்பியம் மெய்ப்பாட்டியலில் குறிப்பிடப்பெறும்.

**”கண்ணிலும், செவியிலும், திண்ணின் உணரும்**
**உணர்வுடை மாந்தர்க்கு அல்லது தெரியின்**
**நன்னயப் பொருள் கோள் எண்ணருங் குரைத்தே” 3**

என்பது நாடகத்தோடு தொடர்புடைய கூற்றாகும்.

பண்டைத் தமிழகத்தில் பாணர், பொருநர், பாடினியர், குயிலுவர், ஆடுநர், பாடுநர், வயிரியர், கோடியார், விறலியர், கூத்தர் போன்ற கலைஞர்கள் ஆடல், பாடல், கூத்து நாட்டியம் நாடகம் ஆகியவைகளைச் சிறப்புற வளர்த்தவர்கள் ஆவார்கள்.

**பாரதிதாசன் படைப்புகள்**

கி.பி.பத்தொன்பதாம் நூற்றாண்டில் மேலை நாட்டு நாடக இலக்கியங்களும் நாடக அமைப்பு முறைகளும், நாடகத்தை நடத்தும் முறைகளும் தமிழக நாடக உலகில் புதிய மாற்றங்கள் பலவற்றைக் கொண்டு வந்து சேர்த்தன. ஆங்கில நாடக அறிஞர்களின் நாடகங்கள் பலவும் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டன என்பது மட்டுமல்லாமல் அவை நாடக அரங்குகளில் நடித்துக் காட்டப்பட்டன.

தமிழ்நாட்டுப் பழக்க வழக்கங்களையும் தமிழ் மக்களையும் தமிழரின் பண்புகளையும் தமிழரின் எண்ணங்கள் நினைப்புகள் போன்றவற்றையும் அடிப்படையாகக் கொண்டு தமிழ் மணம் வீசும் முறையில் நாடகங்கள் மலர வேண்டும் என்ற விருப்பம் வந்த காலத்தில் தான், பேராசிரியர் சுந்தரம்பிள்ளை, மறைமலை அடிகளார், பரிதிமாற் கலைஞர், இலக்குமணப் பிள்ளை, விபுலானந்த அடிகளார் போன்றவர்கள் நல்ல தமிழ் நாடகங்களை இயற்றினார்கள்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில் தமிழ் நாடக உலகில் புதியதொரு மாற்றத்தையும் மலர்ச்சியையும் உருவாக்கித் தந்த தமிழ் நாடகத் தந்தையார் சங்கரதாஸ் சுவாமி சாரும். தமிழ் நாடகத்திற்கு ஆக்கமும், ஊக்கமும் தந்தவர்களில் தலை சிறந்து விளங்கியவர் பம்மல் சம்பந்த முதலியார் ஆவார். இவர் பெரும்பாலும் சமூக நாடகங்களையே இயற்றி, அவற்றை முறைப்படி நடித்துக் காட்டச் செய்தார்.

அறிவுக்கு ஒத்துவராத புராண நாடகங்கள், மனித சமுதாய முன்னேற்றித்திற்குப் பயன்படாத சமூக நாடகங்கள், தமிழ்நாட்டு நாடக அரங்குகளில் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்த நிலையில் தான். புரட்சிக்கவிஞர் பாரதிதாசனும், பேரறிஞர் அண்ணாவும் தமிழ் நாடக உலகில் புதிய எழுச்சியும், மறுமலர்ச்சியும் புரட்சியும் சுயமரியாதைத் தத்துவமும் பகுத்தறிவும் நெறியும் ஆக்கம் பெற, புதிய புதிய மறுமலர்ச்சி நாடகங்களைப் புகுத்தினர்.

புரட்சிக்கவிஞர் நாடகத்துறையில் காணப்பட்ட குற்றங்குறைகள், மூடப்பழக்கங்கள், குருட்டு நம்பிக்கைகள் ஆகியவற்றைக் களைந்தெறியும் முறையிலும் நம்பிக்கையோடு கூடிய புதிய வாழ்வு மலர்வதற்கான வகையிலும், பல்வேறு வகைப்பட்ட சுவைமிகுந்த நாடகங்களை உருவாக்கினார். கவிஞர் தாம் படைத்தளிக்கும் நாடகங்கள் தமிழ்ச் சமுதாயத்தைச் சீர்த்திருத்தவும் செம்மையாகவும் செழுமைப்படுத்தவும் பயன்படுவனவாக அமைய வேண்டும் என்று பெரிதும் விருமபினார்.

புரட்சிக்கவிஞர் ஒரு பகுத்தறிவுவாதி – சீர்திருத்தக்காரர் – அரசியல்வாதி – புரட்சி வீரர் – விடுதலை வேட்கையாளர் – பொதுத் தொண்டர் – தமிழாசிரியர் – கவிஞர் என்பது மட்டுமல்லாமல் இசைக் கலைஞர் – நாடக நடிகர் –நாடக ஆசிரியர் – நாடக இயக்குநர் – திரைப்பட ஆசிரியர் என்ற பெயர்களையும் பெற்றுப் புகழோடு திகழ்ந்தார்.

நாற்பத்தேழு அரிய நாடகங்களைச் சிறப்பாகப் படைத்துள்ளார். அவற்றில், முப்பத்திரண்டு நாடகங்கள் நூல் வடிவம் பெற்று விளங்குகின்றன. நான்கு நாடகங்கள் நூல் வடிவம் பெறாதவைகளாக இருக்கின்றன, பதினோரு நாடகங்கள் அச்சியற்றப் பெறாமலேயே இருந்து வருகின்றன என்று அறியப்படுகின்றது.

புரட்சிக்கவிஞர் எழுதிய நாடகங்களுள், இலக்கியச் சார்புடையனவாக்க் கருதப்படுகின்ற நாடகங்கள் - 1) சத்தி முத்தப் புலவர், 2) கழைக் கூத்தியின் காதலி 3) சேரதாண்டவம் 4) ஆக்கம் 5) தீவினை 6) அமிழ்து எது? 7) அம்மைச்சி 8) தலைமலை கண்ட தேவர் 9) பிசிராந்தையார் 10) இசைக்கலை ஆகிய பத்தும் ஆகும்.

வரலாறு தழுவிய வகையில், சில வரலாற்று நாடகங்களை இயற்றியுள்ளார். அவை, 1) ரஸ்புடீன் 2) சமணமும் சைவமும் 3) பாரதப் பாசறை ஆகிய மூன்றும் ஆகும்.

அவர் சமுதாயப் பின்னணி நிகழ்ச்சிகளை வைத்துக் கொண்டு சீர்திருத்த நோக்கத்தோடு சமூக நாடகங்களை எழுதியுள்ளார். 1) லதாக்ருகம் 2) சங்கீத வித்வானோடு 3) அமைதி 4) இன்பக்கடல் 5) நல்ல முத்துக்கதை 6) படித்த பெண்கள் 7) குடும்ப விளக்கும் குண்டுக்கல்லும் 8) பறவைக் கூடு 9) மக்கள் சொத்து ஆகிய ஒன்பதும் ஆகும்.

பாரதிதாசன் சமூகத்திலுள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி நகைச்சுவை நாடகங்கள் சிலவற்றை இயற்றியுள்ளார். அவை 1) ஐயர்வாக்கு, பலித்தது 2) விகடக்கோர்ட் 3) கற்கண்டு 4) பொறுமை கடலினும் பெரிது 5) குலத்தில் குரங்கு ஆகிய ஐந்தும் படைத்துள்ளார்.

ஆரிய நாகரிகத்தின் புரட்டுக்களை விளக்கிக் காட்டும் வகையில் 1) ஆரிய பத்தினி மாரிஷை 2) வஞ்ச விழா ஆகிய இரண்டையும் படைத்துள்ளார்.

புரட்சிக்கவிஞர், தம் நாடகப் படைப்புக்களைக் கொள்கை – குறிக்கோள் – கோட்பாடு – சீர்திருத்தம் ஆகியவற்றை அடிப்படையாக்க் கொண்டு உருவாக்கியுள்ளார். நாடகங்கள் சீரிய நல்ல கொள்கைகளைக் கொண்டு தான் எழுதப்பட்ட வேண்டும் என்றும், பணம் குவிப்பதை மட்டுமே குறிக்கோளாக்க் கொள்ளக் கூடாது, வேண்டாத தகாத பழமை நிலைகளை நீக்கி, விரும்பத்த் தகுந்த நலங்களை சுட்டிக்காட்ட வேண்டும் என்றும் புரட்சிக் கவிஞர்,

**“சீரியநற் கொள்கையினை எடுத்துக் காட்டச்**
**சினிமாக்கள் நாடகங்கள் நடத்த வேண்டும்!**
**கோரிக்கை, பணம் ஒன்றே என்று சொன்னால்**
**கொடுமை இதை விடவேறே என்ன வேண்டும்?” 4**

என பாடல் வழி விளக்குகிறார்.

தன் ஏழு பிள்ளைகளைக் கிணற்றில் தள்ளித் தானும் விழப்பார்த்த நல்லதங்காள் கதையைப்

பொருத்தம் ஏதும் இல்லாமல், சினிமாக்காரர்கள் காட்டி, நாட்டைப் பாழாக்குகின்றனர் என்றும், நாடகங்களில் நல்ல தமிழே நடமாடுவதில்லை என்றும், இவற்றை எல்லாம் நினைத்துப் பார்த்தால் தமிழரின் உள்ளம் வெடிக்கும் நெஞ்சம் துடிக்கும் என்று புரட்சிக்கவிஞர்,

**“முன்னேற்றம் கோருகின்ற இற்றை நாளில்,**
**மூளிசெயல் தாங்காத நல்ல சிகிச்சை,**
**தானேழு பிள்ளைகளைக் கிள்ளிப் போட்ட**
**சரிதத்தைக் காட்டுகின்றார். சினிமாக்காரர்” 5**

என்று உள்ளம் குமுறுகின்றார்.

எழுத்தாளன் எப்படி இருக்க வேண்டும் என்பதை புரட்சிக்கவிஞர், புதுப்புது கருத்துக்கள் மலையூற்றுப்போல் பெருக்கெடுத்து ஓட வேண்டும் என்றும், கண்டதையெல்லாம் கண்டபடியெழுதிக் கட்டுரைக் குப்பைகளாகக் குவிக்கக்கூடாது, அப்படிக் குவித்தால் ஊராரும் தூற்றுவார்கள் என்றும், எள்ளி நகையாடப்படும் என்றும், புரட்சி மனப்பான்மையோடு இருக்கும் நிலையை மாற்றி அமைக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார். இதனை,

**“கருத்தூற்று மலையூற்றாய்ப் பெருக்கெடுக்க வேண்டும்**
**கண்டதைமேற் கொண்டெழுதிக் கட்டுரையாக் குங்கால்**
**தெரு தூற்றும் ஊர் தூற்றும், தம்முளமே தம்மேற்**
**சிரிப்பள்ளித் தூற்றும், நலம் செந்தமிழ்க்கும் என்னாம்?6**

என்ற வரிகள் மூலம் அவரின் நிலையினை அறிந்து கொள்ள முடிகிறது.

முடிவுரை

புரட்சிக்கவிஞர் எழுதியுள்ள நாடகங்களில் சில இன்பியல் நாடகங்களாக அமைந்திருக்கின்றன. வேறு சில துன்பியல் நாடகங்களாக இருக்கின்றன, மற்றும் சில இரண்டும் அற்ற பொதுப்படையான நாடகங்களாக ஒளிர்கின்றன. அவருடைய நாடகங்க் அனைத்தும் பண்பாடு – நாகரிகம் – சீர்திருத்தம் – பகுத்தறிவு போன்ற சிறப்புடைய கருத்துக்கள் மிளிர்கின்ற வகையில்தாம் காட்சி அளிக்கின்றன.

**“தமிழ்ப்புலவர் தனித்தமிழ்**
**நாடகங்கள் படக்கதைகள்**
**எழுத வேண்டும்”**

என்று புரட்சிக்கவிஞரின் எண்ணம் எதிர்காலத்தில் மேலும் பொலிவு பெறும்.

**அடிக்குறிப்புகள்**

1. தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணை-நூற்பா.53
2. மணிமேகலை-சிறைக்கோட்டம் அறக்கோட்டம் ஆக்கிய காதை பா.79-80
3. தொல்காப்பியம், மெய்ப்பாட்டியல் – நூற்பா.27
4. பாரதிதாசன். பன்மணித்திரள், ப.223
5. மேலது, ப.224

6. பாரதிதாசன், திராவிடன், ப-200

**முதன்மை ஆதாரங்கள்**

1.பாவேந்தம் – தொகுதிகள் 7,8,9,10,11,12 - இளங்கணி பதிப்பகம், சென்னை – 600 015

**துணைமை ஆதாரங்கள்**

1. தொல்காப்பியம், பொருளதிகாரம் - மணிவாசகர் பதிப்பகம், சென்னை- 600 108
2. பாரதிதாசன் கவிதைகள் - உமா பதிப்பகம், சென்னை – 600 001
3. மணிமேகலை - தமிழ் நிலையம், சென்னை – 600 017